**செய்தி வெளியீடு எண் : 423** **நாள்: 17.03.2022**

# <u>செய்தி வெளியீடு</u>

பதிவுத்துறையின் அனைத்து சார்பதிவாளர் அலுவலகங்களும் மாற்றுத் திறனாளிகளுக்கு வசதியான வகையில் செயல்பட வேண்டும் என மாண்புமிகு முதல்வர் அவர்கள் உத்திரவிட்டுள்ளார்கள். அதன்படி அனைத்து சார்பதிவாளர் அலுவலகங்களும் மாற்றுத் திறனாளிகள் வந்து செல்லும் வகையிலான வசதிகளுடன் உள்ளனவா என்பதை உறுதி செய்யுமாறு மாண்புமிகு வணிகவரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் திரு.பி.மூர்த்தி அவர்கள் அறிவுறுத்தியுள்ளார்கள். தற்போது தமிழகத்தில் மொத்தம் உள்ள 575 சார்பதிவாளர் அலுவலகங்களில் 539 சார்பதிவாளர் அலுவலகங்கள் தரை தளத்திலேயே இயங்கி வருகின்றன. ஏனைய 36 அலுவலகங்களில் மூன்று அலுவலகங்களில் மட்டுமே மின்தூக்கி (Lift) வசதி உள்ளது. மீதமுள்ள 33 அலுவலகங்களில் 31 அலுவலகங்கள் முதல் தளத்திலும், இரண்டு அலுவலகங்கள் இரண்டாவது தளத்திலும் இயங்கி வருகின்றன. இவற்றில் 17 அலுவலகங்கள் தனியார் கட்டடங்களில் இயங்கி வருவதால் அவற்றை ஒரு வார காலத்திற்குள்ளாக தரை தளத்தில் உள்ள கட்டடத்திற்கு மாற்றுமாறு மண்டல துணை பதிவுத்துறை தலைவர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. மீதமுள்ள 16 அலுவலகங்கள் தற்போது அரசு கட்டடத்தில் செயல்பட்டு வரும் நிலையில் இவ்வலுவலகங்களில் உடனடியாக மின்தூக்கி (Lift) பொருத்தும் பணியை துவக்க கண்டிப்பான அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன.

அரசு செயலாளர்
வணிகவரி மற்றும் பதிவுத் துறை

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**